பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 120

புதன்கிழமை
26 மார்ச் 2025

பங்குனி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறைப் பகுதியில் கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் 10

தேசியக்கொடியை இறக்கிய

# யாழ்.பல்கலை மாணவர்கள் மீது பாயத்தயாராகிறது ஆணைக்குழு!

நிர்வாகத்துக்கும் குடைச்சல்

யாழ்ப்பாணம், மார்ச் 26

சுதந்திரதினத்தன்று தேசியக்கொடியை கீழிறக்கி, கறுப்புக்கொடியை ஏற்றிய யாழ்.பல்கலைகழக மாணவர்கள் 9 பேர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க பல்கலைக்கழக மானியங்கள் தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 15

ஐ.நா.வில் கொண்டுவரப்படவுள்ள

## பிரிட்டனின் பிரேரணை; நிராகரித்தது இலங்கை

உயர்மட்டக் குழுவுக்கும் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 26
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் பிரிட்டனால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையை ஏற்கமுடியாது என்று பிரிட்டனின் உயர்பிரதிநிதியிடம் இலங்கை திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. 05

## ஹெரோய்ன் நுகர்வு; இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் அளவுக்கு அதிகமான ஹெரோய்னை நுகர்ந்த இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார். 10

## யுவதியொருவர் சடலமாக மீட்பு

வவுனியா, மார்ச் 26
வவுனியா கலாபோகஸ்வேவ பகுதியில் கிணற்றிலிருந்து, 30 வயதுடைய யுவதியொருவர் சடலமாக 15

தொடர் கூச்சல் குழப்பங்களால்

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்கூட்டம் நேற்று இடைநடுவில் கைவிடப்பட்டது!

யாழ்ப்பாணம், மார்ச் 26
நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொடர்ச்சியான கூச்சல் குழப்பங்கள் காரணமாக, யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடைநடுவே கைவிடப்பட்டது.
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலை 15

## பிரிட்டனின் தடை பெரும் அநீதியாம்

சொல்கிறார் மைத்திரி

கொழும்பு, மார்ச் 26
பிரபாகரன் உயிரிழக்கும்போது நான்தான் பதில் பாதுகாப்பு அமைச்சர். எனவே, போரின் இறுதிக் கட்டத்தில் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும். படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை.
பிரிட்டனின் தடையானது பெரும் அநீதியாகும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால 10

## பிரிட்டனின் தடைகள் மிகவும் ஆபத்தானவை

பதற்றத்தில் பெரமுன

கொழும்பு, மார்ச் 26
யாழ்ப்பாணத்து மக்களே போரை மறந்து சிங்களத் தலைவர்கள் உள்ள அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ள சூழ்நிலையில், படையினரை இலக்கு வைத்து பிரிட்டன் தடைகளை விதிப்பது பாரதூரமானது என்று ஸ்ரீலங்கா 16

## மஹாதேவக்குருக்கள் நேற்றுக் காலமானார்!



திருகோணமலை, மார்ச் 26
'சிவாகம கலாநிதி' தாணு மஹாதேவக் குருக்கள் (வயது-87) நேற்றுக் காலமானார்.
அந்தணர்களின் உயர்வுக்காக குருகுல கல்வி முதல் பல்வேறு வழிகளிலும் தாணு மஹா 10

## வியாழேந்திரன் நேற்றுக் கைது

கொழும்பு, மார்ச் 26
ஊழல்கள் மற்றும் மோசடிகளுடன்தொடர்புடைய குற்றச்சாட்டுக்காக, முன்னாள் இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் இலஞ்ச ஊழல் 16




'விதானையாருக்கு இப்பிடிப் புசத்திறதும் புளுகிறதும்தான் முழுநேர வேலை கண்டியளோ'

## பாற்பண்ணைக் காணி விடுவிப்பு; கோரிக்கைக் கடிதத்தைத் தருக

இராணுவ அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26
திருநெல்வேலி பாற்பண்ணை பகுதியில் கடந்த 2013ஆம் ஆண்டு முதல் இராணுவமுகாம் அமைந்துள்ள காணியை, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத் திடம் ஒப்படைக்குமாறு கோரிய நிலையில், அது 10

வெளிநாட்டிலிருந்து பணத்தை பெறும் உங்களுக்கு
கொம்பேங்க் ரெமிட்டன்ஸ் ஊடாக




நாளாந்தம் ரூ. 50,000/- வீதம்
02 மாதங்களுக்கு ரூ. 3 மில்லியன்
பெறுமதியான பணப் பரிசுகள்

ComBank Remit PLUS
COMMERCIAL BANK



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 25.03.2025 | திகதி 25.03.2025 | திகதி 25.03.2025 | திகதி 25.03.2025 | திகதி 25.03.2025 | திகதி 25.03.2025 | திகதி 25.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4028 | சீட்டிழுப்பு இலக்கம் 1095 | சீட்டிழுப்பு இலக்கம் 0054 | சீட்டிழுப்பு இலக்கம் 2134 | சீட்டிழுப்பு இலக்கம் 5786 | சீட்டிழுப்பு இலக்கம் 1816 | சீட்டிழுப்பு இலக்கம் 0361 |
| ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கிளம் விருச்சிகம் | ஆங்கில எழுத்து K | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து C | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து C |
| வெற்றி இலக்கங்கள் 04 06 16 24 | வெற்றி இலக்கங்கள் 01 16 26 36 | வெற்றி இலக்கங்கள் 2 8 5 7 | சுப்பர் இலக்கம் 2134 | வெற்றி இலக்கங்கள் 6 5 2 5 5 2 | வெற்றி இலக்கங்கள் 07 44 74 82 | வெற்றி இலக்கங்கள் 2 5 5 2 |
| விசேட எழுத்து E | | | வெற்றி இலக்கங்கள் 11 17 28 59 | | விசேட எழுத்து I | |

# ஈழக்கனவை நனவாக்கவே தடைவிதித்தது பிரிட்டன்

## நாமல் ராஜபக்ச கொதிப்பு



**கொழும்பு, மார்ச் 26**

**எமது நாட்டில் தீவிரவாதம் முடிவுக்கு கொண்டுவரப் பட்டாலும் சர்வதேச மட்டத்தில் பிரிவினை வாதம் ஒழிக்கப்படவில்லை. அதற்கமையவே ஈழம் கனவை நனவாக்குவதற்குரிய முயற்சி எடுக்கப்படுகின்றது என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

பிரிட்டனின் தடை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழம் கனவை நனவாக்குவதற்குரிய வேலைத்திட்டம் இடம்பெற்றாலும் இது விடயத்தில் கண்டும், காணாததுபோலவே அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. தேர்தல் காலத்தில் புலம்பெயர்வாளர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

ஈழம் கனவை நனவாக்குவதற்குரிய முயற்சி எடுக்கப்படுகின்றது. இதனை நாம் ஆரம்பத்தில் இருந்தே சுட்டிக்காட்டி வருகின்றோம். பிரிட்டனின் தடை தொடர்பில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும். நாட்டுக்காகவே படையினர் போரிட்டனர். மஹிந்த ராஜபக்ச அரசியல் தலைமைத்துவத்தை வழங்கினார். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் பயங்கரவாதத்தை ஒழிக்கும் தீர்மானத்தை எடுத்தது. அதனையே படை அதிகாரிகள் செயற்படுத்தினர். எனவே இராணுவத்தை பாதுகாப்பதற்கு அரசாங்கமும் அணிதிரள வேண்டும் - என்றார். (ச-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 25.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம் 0494 |
| ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கம் 7 8 7 8 8 6 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 25.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2760 | ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கம் 29 50 61 78 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 25.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கம் 18 33 49 63 | வெற்றி வாரம் 4921 |

| SASIRI | |
|---|---|
| திகதி 25.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் 0650 | வெற்றி இலக்கம் 18 33 49 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 25.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| விருட்சிகம் | வெற்றி இலக்கம் 29 44 46 50 | சீட்டிழுப்பு வாரம் 4472 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 25.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து R | சுப்பர் இலக்கம் 12 | வெற்றி இலக்கம் 11 46 48 53 | வெற்றி வாரம் 1936 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 25.03.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கம் 03 21 60 63 | வெற்றி வாரம் 2586 |

# தனித்தே களம் சஜித் உறுதி

கொழும்பு,மார்ச் 25

முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோருடன் கூட்டணி அமைக்கப்போவதில்லை. உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து இடங்களிலும் தமது கட்சி தனித்தே போட்டியிட்டு வெற்றிபெறும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது சஜித், மஹிந்த, ரணில் இணையவுள்ளதாகச் செய்திகள் பரவி வருகின்றன. இவை முற்றிலும் பொய்யானவை. ஐக்கிய மக்கள் சக்திக்கு வேறு எவருடனும் சேர வேண்டிய் தேவையில்லை - என்றார். (ச-33-44)

# படையினருக்குப் பிரிட்டன் தடை; ஏற்றுக்கொள்ளவே முடியாது

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

கருணா அம்மானுக்காக அல்ல, படையினருக்காக அரசாங்கம் முன்னிலையாக வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் தடைவிதிப்பு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

போரை முடிப்பதற்கு பங்களிப்பு வழங்கியவர்களுக்கு தடைவிதிப்பதை ஏற்கமுடியாது. இதுவிடயத்தில் அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டும்.

இராணுவத்துக்காக அரசாங்கம், நாடு என்ற வகையில் முன்னிலையாக வேண்டும், படையினருக்காக அது நடக்கவேண்டும், கருணா அம்மானுக்காக அல்ல.

மனித உரிமைகள் பிரச்சினையை இராஜதந்திர ரீதியில் தீர்க்க வேண்டும். அதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைக்கு ஆதரவளிக்கப்படும்- என்றார். (ச-44)

# கிராமங்களின் அதிகாரத்தை மொட்டு மீளக் கைப்பற்றுமாம்

## சாகர காரியவசம் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 26

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தாக்கல் செய்திருந்த வேட்புமனுக்களில் 263 வேட்புமனுக்கள் நாடளாவியரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. கிராமங்களின் அதிகாரத்தை மீளக் கைப்பற்றுவோம் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பிறப்புச்சான்றிதழ் செல்லுடியாகும் காலம் காரணமாகச் சில வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பில் நீதிமன்றத்தை நாடுவோம்.

2018ஆம் ஆண்டு பெருமளவிலான உள்ளூராட்சிச் சபைகளைக் கைப்பற்றினோம். இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் மீண்டும் கிராமங்களின் அதிகாரங்களைக் கைப்பற்றுவோம்.

தற்போதைய ஜனாதிபதி பதவிக்கு வந்து 6 மாதங்கள் முடிந்துள்ளபோதும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. நடக்கவுள்ள தேர்தலில் மக்கள் அரசாங்கத்துக்குத் தகுந்த பாடம் புகட்டுவார்கள்- என்றார்.(ஏ)

# தேசபந்துவை நீக்கும் பிரேரணை சமர்ப்பிப்பு

கொழும்பு, மார்ச் 26

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணை நாடாளுமன்ற உறுப்பினர்களால் சபாநாயகரிடம் நேற்று செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரேரணையில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் 115 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் எரங்க குணசேகர தெரிவித்துள்ளார்.

அதிகாரத் துஷ்பிரயோகம், மோசடி உட்பட பல காரணங்களை அடிப்படையாகக்கொண்டே குறித்த பிரேரணை, பொலிஸ்மா அதிபருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேற்படி பிரேரணை தொடர்பில் ஆராய்வதற்காக சபாநாயகரால் [illegible] மிக்கப்பட்டுள்ளது. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் சிந்திக்காவிடின் நாடு மீதும் தடை பாயும்!

## அரசியல் ஆய்வாளர் பிரதிபா மஹநாமஹேவா எச்சரிக்கை

**கொழும்பு, மார்ச் 26**

**தேசிய பொறிமுறையைச் செயற்படுத்தாவிட்டால் எதிர்காலத்தில் நாட்டுக்கு எதிராகவும் தடைகள் விதிக்கப்படக்கூடும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி பிரதிபா மஹநாமஹேவா எச்சரித்துள்ளார்.**

முன்னாள் படைத்தளபதிகளான சவேந்திரசில்வா, வசந்த கரன்னாகொட, ஜகத் ஜயசூரிய மற்றும் கருணா அம்மான் ஆகியோருக்குப் பிரிட்டனால் விதிக்கப்பட்டுள்ள தடைகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே இவர் இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டின் 58 படையினருக்கு எதிராக அமெரிக்கா தடைவிதித்துள்ளது. அவர்களுக்கு அமெரிக்காவில் விசா வழங்கப்படமாட்டாது என்பதுடன், அந்நாட்டிலுள்ள சொத்துகள் முடக்கப்படும். இதேவழியில்தான் பிரிட்டனும் தற்போது தடைவிதித்துள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக தனிநபர்களுக்கு எதிராகத் தடைகள் விதிக்கப்பட்டு எதிர்காலத்தில் நாட்டுக்கு எதிராகவும் விதிக்கப்படக்கூடும். தடைகள் வருவதற்குரிய சூழ்நிலைகள் எம்மால்தான் உருவாக்கிக்கொடுக்கப்பட்டுள்ளன. ஏனெனில் உள்ளகப் பொறிமுறையிலுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

2015 இல் தேசிய சமத்துவம் தொடர்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரைகள் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பரணகம ஆணைக்குழு உட்பட உள்நாட்டில் பல குழுக்கள் செயற்பட்டுள்ளன. எனினும், மேற்படி ஆணைக்குழுக்களால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நிராகரிப்பது மட்டும் போதாது, நாமும் பொறிமுறையை செயற்படுத்த வேண்டும்-என்றார். (ச-44)




**தாய் பகை குட்டி உறவெண்ட கதையாத்தான் தையிட்டி விகாரை விசயத்தில ஆமியும் அரசாங்கமும் இருக்கெண்டு கேள்வி. திசைகாட்டிக்காரர் 'என்னவோ பிரச்சினையள் வரக்கூடாது எண்டுதான் பாக்கினம். ஆனால் அவையின்ர சொல் வழியைக் கேக்கிற நிலைமையில ஆமிக்காரர் இல்லையாம். என்னதான் இருந்தாலும் உந்த ஜே.வி.பி.காரர் எங்களுக்கு எதிராத் துவக்குத் தூக்கின ஆக்கள்தானே' எண்ட மனாநிலையில இருந்து ஆமிக்காரர் வெளியால வரவேயில்லை. அதால அவை அரசாங்கத்தின்ர உத்தரவுகளையும் பெரிசா மதிக்கிறேலை. அதாலதான் கற்கோவளம் ஆமிக்காம்பை விட்டுப்போகச்சொல்லி அரசாங்கம் ஓர்டர் போட்டு மாசக்கணக்காகியும் இன்னும் அதை விட்டு ஆமிக்காரர் அசையேலை. அதைமாதிரி திசைகாட்டிக்காரர் கஷ்டப்பட்டு ஏதேனும் ஒரு விசயத்தைச் செய்யநினைச்சாலும், இந்த ஆமிக்காரர் குறுக்கால போய் கெடுக்கிறதிலயே குறியா இருக்கினமாம்.**

**தையிட்டி விகாரை விசயத்திலையும் அரசாங்கம் ஒரு தீர்வைக் காணுவம் எண்டு இறங்கிவந்தாலும் கூட, ஆமிக்காரர்தான் விடாப்பிடியா நிக்கினம். அது தங்கட தன்மானப்பிரச்சினை எண்டு ஆமிக்காரர் நினைக்கினம். உந்த விகாரைக்கு அடிக்கல் வைச்சதில இருந்து அத்திபாரம் வெட்டினதும் ஆமிதான், அதைக் கட்டிமுடிச்சதும் ஆமிதான், கொழும்பில இருந்து பிக்குவைக் கொண்டந்து இருத்தினதும் ஆமிதான், உந்த விகாரையைக் கும்பிடுறதும் ஆமிதான். அந்த விகாரைக்கு பச்சை, மண்ணிறம், கறுப்பு கலந்து ஆமியின்ர உடுப்புமாதிரி பெயின்ற் அடிக்கேலையேதவிர, மற்றப்படி தையிட்டி விகாரையில எல்லாமே ஆமி மயம்தான். அதாலதான் அவையள் சனத்தோட இப்பிடி வீம்புக்கு நிக்கினமாம்.**

**போன ஞாயிற்றுக்கிழமை அந்த விகாரையோட சேர்த்து ஒரு மடாலயத்தையும் உந்த ஆமிக்காரர்தான் கட்டித் திறந்தவை. அவைதான் பொலிஸ்கார அதிகாரிக்கும் சொல்லி, அவரைக் கூட்டியந்து திறந்திருக்கினம். இத்தனைக்கும் போனகிழமைதான் தையிட்டி விகாரை பற்றி வடிவா ஆராய்ஞ்சு நல்ல முடிவை எடுப்பம் எண்டு அரசாங்கம் அறிவிச்சிருந்தது. அதைக்குழப்பியடிக்கிறமாதிரி 'அரசாங்கம் என்ன சொன்னாலும் நாங்கள் இப்பிடித்தான் நடப்பம்' எண்டுகாட்டத்தான் இப்பிடியொரு திறப்புவிழா விளையாட்டை ஆமிக்காரர் செய்தவையாம். ஒரு பெரிய பஸ்ஸில எழுபது, எண்பது ஆமிக்காரரை திறப்புவிழாவுக்குக் கொண்டந்திருக்கினம். திடீரெண்டு பார்த்தால், எல்லா ஆமிக்காரரும் ஏதோ சண்டை தொடங்கிட்ட மாதிரி, விழுந்தடிச்சுக்கொண்டு வந்து பஸ்ஸில பறந்துபோட்டினம். 'ஆரைக்கேட்டு இப்பிடியெல்லாம் ஆமிக்காரரை கொண்டந்து திறப்புவிழாச் செய்வியள்? உடனடியா எல்லாரும் இப்பவே வெளிக்கிடவேணும். இல்லாட்டி எல்லாரையும் வேலையில இருந்து தூக்கிப்போடுவம்' எண்டு கொழும்பில இருந்து பாதுகாப்புப் பிரதியமைச்சர், இஞ்சயிருக்கிற ஆமிக்கொமாண்டருக்கு தும்புபறக்கப் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சோட கெலிச்சுப் போன கொமாண்டர், தன்ர படைபட்டாளத்தை உடனடியா விகாரையில இருந்து போகச்சொல்லத்தான் அவையள், சோத்துப்பார்சலையும் வாங்காமல் இடையில பஸ்ஸில ஏறிப்போயிருக்கினம். இந்த விசயத்தால அரசாங்கத்தில கடும் கறுவியமா அந்த ஆமிக்கொமாண்டர் இருக்கிறாராம். உந்தக் கறுவியத்தை வைச்சு இனி என்ன கூத்துக்காட்டப்போயினமோ தெரியேலை.**

padsi@uthayan.com - பட்சி

# இந்திய மீனவர் அத்துமீறல் கடந்த ஆண்டில் 416 பேர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 26

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த ஆண்டில் 416 இந்திய மீனவர்களும் இந்த ஆண்டில் இதுவரை 32 மீனவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோது கடற்றொழில். நீரியல்வளத்திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில், சட்டவிரோத மீன்பிடி தொடர்பில் கடந்த ஆண்டில் இந்தியாவில் இருந்துவந்த 55 படகுகளும் இந்த ஆண்டில் இதுவரை 5 படகுகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. உள்ளூர் சட்டவிரோத மீன்பிடி தொடர்பில் கடந்த ஆண்டு 151 படகுகளுடன் 436 மீனவர்களும் இந்த ஆண்டில் 11 படகுகளுடன் 35 மீனவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்- என்றார் (ச-25-26-125)

# மின்கலம் திருடியோருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைத்தொடர்புக் கோபுரங்களின் மின்கலங்களைத் தொடர்ச்சியாகத் திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட கடற்படை முன்னாள் சிப்பாய் உட்பட 5 பேரும் எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் யாழ்ப்பாணத்தில் மட்டும் இவ்வாறு 192 மின்கலங்களைத் திருடியுள்ளனர் என்றும், மின்கலம் ஒன்றின் பெறுமதி ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-20,27)



# தேர்தல் சட்டமீறல் 32 பேர் கைது!

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 32 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் புத்திக மனதுங்க இதனைத் தெரிவித்துள்ளார். கைதானவர்களில் 10 வேட்பாளர்களும் அடங்குகின்றனர். வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 16 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

**ஈஸ்டர் தாக்குதல் சம்பவம்**

# இப்ராஹிம் மீதான வழக்கு ஜூலை 2க்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 26

உயிர்த்த ஞாயிறுத் தற்கொலைத் தாக்குதல் சூத்திரதாரிகளின் தந்தையான முகமட் இப்ராஹிம் மீதான வழக்கு விசாரணை ஜூலை 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சாட்சிகளில் ஒருவர் வெளிநாடு சென்றுள்ளதை அடுத்தே வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முகமட் இப்ராஹிம் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு 30 மில்லியன் நிதியுதவி அளித்திருந்தார் என்று தாக்குதல் நடைபெற்ற காலத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்த சரத்வீரசேகர தெரிவித்திருந்தார். அதேவேளை, முகமட் இப்ராஹிம் 2015ஆம் ஆண்டு நாடாளுமன்ற நியமன உறுப்பினராக ஜே.வி.பியால் நியமிக்கப்பட்டவராவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-6)

# பூநகரி பிரதேசசபைக்கு 8 தரப்புகள் கட்டுப்பணம்

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலுக்காக பூநகரி பிரதேச சபைக்கு 8 தரப்புகள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் வே. சிவராஜன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார். எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை 12 மணிவரை வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும். தற்போதுவரை (நேற்றுமுன்தினம்) தேசிய மக்கள் சக்தி மட்டும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். ( எ-125,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய

**மேடம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்கினால் வெற்றி கிடைக்கும். தாய் வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும் பாதிப்பு இருக்காது.

**இடபம்:** புதிய முயற்சிகள் எதுவும் இன்றைக்கு வேண்டாம். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். காலையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். பிற்பகலுக்கு மேல் கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையக்கூடும். கணவன் மனைவிக்கிடையே சிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டாலும் உடனே சரியாகிவிடும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சி வெற்றிகர மாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** இன்று புதிய முயற்சி எதிலும் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்து ணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயல்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற சற்று அலைய வேண்டி இருக்கும்.

**விருச்சிகம்:** தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணை உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மற்றவர்கள் கோபத்தில் பேசினாலும், நீங்கள் பொறுமையுடன் இருக்கவேண்டியது அவசியம். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். சிலருக்கு ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்.

### பேச்சு நடத்துவதற்கு

# இந்திய மீனவர்கள் குழு யாழ்ப்பாணம் வருகை!

கொழும்பு, மார்ச் 26

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இலங்கை மீனவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு இந்திய மீனவர் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது.

இந்த இருநாட்டு மீனவர்கள் சந்திப்பு வவுனியாவிலுள்ள தனியார் விடுதியொன்றில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தியாவின் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஜேசுராஜா, ஆல்வின், சகாயம், ஜஸ்டின், ஜெர்மனியஸ் ஆகியோர் கொண்ட 5 பேர் கொண்ட குழுவே நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தினூடாக வந்தடைந்துள்ளது.

இலங்கை மீனவர்கள் சார்பில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 12 பேர் கொண்ட குழு இதில் பங்கேற்கவுள்ளது.

இதன்போது இருநாட்டு மீனவர் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு எட்டுவது தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச- 125)

# பதற்றமான ஆட்டத்தில் பஞ்சாப் திரில் வெற்றி!

## அணித்தலைவர் ஸ்ரேயஷ் அர்ப்பணிப்பான ஆட்டம்

**அஹமதாபாத், மார்ச் 26**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், அணித்தலைவர் ஸ்ரேயஷின் அர்ப்பணிப்பான ஆட்டமும், ஷஷாங் சிங்கின் அதிரடியும் கைகொடுக்க, குஜராத்தை வீழ்த்தியது பஞ்சாப்.**



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணிக்கு பிரப்சிம்ரன் சிங் வெறும் 5 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். எனினும் ஆர்யா மற்றும் ஸ்ரேயஸ் இருவரும் அதிரடியைக் கையிலெடுத்து அணியைப் பலப்படுத்தினார்கள். 47 ஓட்டங்களுடன் ஆர்யா ஆட்டமிழந்தார். இன்னிங்ஸில் எந்தச் சரிவும் ஏற்படவில்லை. அதிரடியைத் தொடர்ந்தார் ஸ்ரேயஸ். மக்ஸ்வல், ஸ்ரொய்னிஸ் மத்திய வரிசையில் ஏமாற்றினார்கள். எனினும் கடைசிக்கட்ட அதிரடியால் பஞ்சாப்பை மேலும் உரப்படுத்தினார் ஷஷாங். அணித்தலைவர் ஸ்ரேயாஸ் 97 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

அவருக்கு சதம் பெறக்கூடிய வாய்ப்பு அதிகளவில் இருந்தது. ஆயினும், ஷஷாங் அடித்தாடுவதற்கு ஷ்ரேயஸ் துணையாக இருந்தாரே தவிர, துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை தான் எடுத்துக்கொள்ளவில்லை. முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 243 ஓட்டங்களை பஞ்சாப் பெற்றது. ஸ்ரேயஷ் 97 ஓட்டங்களுடனும், ஷஷாங் 44 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக் காதிருந்தனர்.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணியும், இலக்கை எட்டக்கூடிய வகையில் சிறப்பான ஆரம்பத்தைக் கண்டது. அணித்தலைவர் கில் 14 பந்துகளில் 33 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். சாய் சுதர்சன் மற்றும் பட்லர் இருவரும் தொடர்ந்தும் இலக்கை எட்டக்கூடிய நம்பிக்கையில் விளையாடிக் கொண்டிருந்தனர். 74 ஓட்டங்களுடன் சாய் சுதர்சன் ஆட்டமிழந்தார். புதிதாகக் களமிறங்கிய ருதர்போர்ட் 46 ஓட்டங்களைப் பெற்றாலும் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 232 ஓட்டங்களையே குஜராத்தால் பெற முடிந்தது. 11 ஓட்டங்களால் பஞ்சாப் வென்றது. (ம-இ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.03.2025 புதன்கிழமை

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 01 . 1975



இறப்பு 25 . 03 . 2025

### முருகையா ரமேஷ்குமார்

வண்ணார்பண்ணை பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா ரமேஷ்குமார் நேற்று (25.03.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா - நாகபூஷணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பஞ்சரத்தினம் நிர்மலகுமாரி தம்பதியரின் அன்பு மருமகனும், கார்த்திகா அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சுரேஷ்குமார், சதீஸ்குமார், கஸ்தூரி, சுகந்தி, பாலகுமார், சந்திரகுமார், துஷ்யந்தி, சசிகுமார், இளமுருகன், தமயந்தி ஆகியோரின் சகோதரரும், துவாரகா, பிரியா, காலஞ்சென்ற ஜனார்த்தனன் ஆகியோரின் மைத்துனரும், நஜித், அபிநயன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2025) புதன்கிழமை 3/3, பத்திரகாளி கோவிலடி வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 600 1499
077 645 6362
076 268 8407

(CS 2815) A

பாரதிராஜாவின் மகன்

# மனோஜ் பாரதிராஜா மாரடைப்பால் சாவு!



சென்னை, மார்ச் 26

இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் மகன் மனோஜ் பாரதிராஜா (வயது -48) மாரடைப்புக் காரணமாக நேற்றுக் காலமானார். சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட இதய அறுவைச் சிகிச்சையைத் தொடர்ந்து, மனோஜ் பாரதிராஜா ஓய்வில் இருந்துவந்தார். இந்த நிலையிலேயே, நேற்று மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார். (ம-இ)


## பிரிட்டனின் பிரேரணை...

இலங்கை வந்துள்ள பிரிட்டன் வெளிவி வகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ - பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் பென் மெல்லருக்கும், இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்டக் குழுவுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்திப்பொன்று நடந்துள்ளது. இந்தச் சந்திப்பின்போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பில் புதிய பிரேரணை ஒன்று கொண்டுவரப்படும் என்று பென் மில்லர் தெரிவித்துள்ளார். இந்தத் தீர்மானத்துக்கான ஒத்துழைப்பு மற்றும் இணையனுசரணை தொடர்பிலும் அவர் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போதே, பிரிட்டனின் பிரேரணைக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது என்று இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். இலங்கை இறைமையுள்ள நாடென்பதால் வெளிநாடுகளால் முன்மொழியப்படுகின்ற தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அதேநேரம், 'உள்நாட்டுத் தேசிய பொறிமுறையை' முன்னெடுப்பதில் அர்ப்பணிப்புக் கொண்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் பொருளாதார நெருக்கடி தணிந்த பின்னர் முன்னெடுக்கப்படும் என்றும் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. (அ-எ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 04 . 1933



மறைவு 25 . 03 . 1925

### திருமதி யோகாம்பிகை கணபதிப்பிள்ளை

சின்னத்தாய் புலோலி தெற்கு, புலோலியை பிறப்பிமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகை கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (25.03.2025) செவ்வாய்க்கிழமை புலோலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவிப்பிள்ளை- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், ஜெயலக்சுமி (கண்டி) முருகானந்தன், ஜெயபாரதி, கிருஸ்ணமூர்த்தி அவர்களின் அன்புத் தாயாரும், லோகேஸ்வரன், நவரட்ணராஜா, சிவரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சிவகாமிப்பிள்ளை, தங்கம்மா, இராசம்மா அகியோரின் அன்புச் சகோதரியும், உமையாத்தையின் அன்பு மைத்துனியும் சகானா, சிந்துஜா, கபிலன், ராகுலன், யாமளவி ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2025) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 724 2033

(CS 29714) A

## மரண அறிவித்தல்



### அமரர் குருசாமி கணேசலிங்கம்

**(புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர் ஆலய பரிபாலன சபைதலைவரும், ஓய்வுபெற்ற ஊர்காவற்துறை பிரதேசசபை செயலாளரும் அகில இலங்கை சமாதான நீதவானும், ஊர்காவற்துறை பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவரும், மத்தியஸ்தர் குழாம் உறுப்பினரும், ஓய்வூதிய சங்க தலைவரும்)**

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குருசாமி கணேசலிங்கம் நேற்று (25.03.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசாமி (JP)-நாகம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-சிவபாக்கியம் தம்பதியின் அன்பு மருமகனும் கமலா அவர்களின் பாசமிகு கணவரும் அமுதினி (ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி), அருளினி (மகாமாரி முன்பள்ளி ஆசிரியர்), அஞ்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் பாலசுப்பிரமணியம் (முன்னாள் கூட்டுறவு சங்க முகாமையாளர்), கலைமகள் ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற குணசிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்) மற்றும் லீலாவதி திருவருள், தேவகி, இந்திரன், கலைவாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தகிரிநாதன் (உப அதிபர் புதுக்குடியிருப்பு றோ.க.வி), சர்வேஸ்வரன், லோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாத்வீகா, கவினுகா, சபீகா, சங்கவி, யாதவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (26.03.2025) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 915 4467 (மகள்)

(CS 2809) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு

02 . 01 . 1961

இறப்பு

23 . 03 . 2025

# தர்மலிங்கம் தர்மசீலன்

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் Brighton லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தர்மசீலன் கடந்த 23.3.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், இவரின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், அனைவரும் Brighton London இல் வசிக்கின்றனர்.

இவரின் இறுதிக்கிரியைகள் Brighton London இல் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**

Srilanka number
thuvakaran : 077 641 4550
sivasumithiran : +0044 7703 670781
ketheesan : 00447538 267735

(Cr/44670)N -1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

பழி வாங்குதல் வீரமன்று
பொறுப்பதே வீரம்.

– ஷேக்ஸ்பியர்–

# அழுத்தங்கள் இல்லாவிட்டால் அமைதிக்கு வழியில்லை!


ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது அமர்வில் இணைத்தலைமை நாடுகளின் ஒத்துழைப்புடன் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பாக பிரிட்டன் கொண்டுவரவுள்ள பிரேரணையை நிராகரித்துள்ளது. இலங்கை வந்துள்ள பிரிட்டன் வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ-பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் பென் மெல்லரிடம், இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டக்குழு இதைத்திட்டவட்டமாக அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் நடந்த இறுதிப்போரில் இழைக்கப்பட்ட மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் தீர்மானங்கள் கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்டிருந்தன. இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இன்றியும், இலங்கையின் அனுசரணையுடனும் கடந்தகாலத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோதும், அந்தத் தீர்மானங்களில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளவில்லை. சர்வதேச நாடுகளை ஏமாற்றும் வகையில் சில நடவடிக்கைகள் இலங்கையால் முன்னெடுக்கப்பட்ட போதும், அவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயனேதும் கிட்டவில்லை.

இறுதிப்போரில் நடந்த குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் தொடர்ச்சியாகப் பொறுப்புக்கூறலை வலியுறுத்துகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதும், குற்றங்களில் ஈடுபட்டவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதும் நீண்டகாலக் கோரிக்கைகளாக உள்ளன. பாதிப்புக்குள்ளான மக்கள் இலங்கையின் உள்நாட்டு நீதிப்பொறிமுறையில் நம்பிக்கையற்றிருக்கும் நிலையில், வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்றின் மூலமே தங்களுக்குநீதி கிடைக்கும் என்பதை உறுதியாக நம்புகின்றனர். சர்வதேச நாடுகளும் கடந்த காலங்களில் வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறைக்கான அழுத்தங்களை இலங்கைக்கு வழங்கியிருந்தன. ஆயினும், வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறையைத் தொடர்ச்சியாக நிராகரித்துவந்த இலங்கை, உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை என்ற நிலைப்பாட்டையே வெளிப்படுத்திவருகிறது.

இலங்கை உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை மூலம் பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படும் என்று கூறிவந்த போதும், உள்நாட்டுப்போர் முடிந்து 16 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் அதற்கான எந்தப் பொறிமுறையையும் உருவாக்க முயலவில்லை. இந்தப் பின்னணியிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற தலைப்பில் புதிய பிரேரணை ஒன்று பிரிட்டனால் கொண்டுவரப்படும் என்பதைப் பிரிட்டன் வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ-பசிபிக் பிராந்தியப் பணிப்பாளர் பென் மெல்லர் வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் அந்தப் பிரேரணையை நிராகரித்துள்ள இலங்கை, இலங்கை இறைமையுள்ள நாடு என்பதால் வெளிநாடுகளால் முன்மொழியப்படும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், உள்நாட்டுப் பொறிமுறை மூலமே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் பழைய வாதத்தையே அவரிடம் முன்வைத்துள்ளது. அதுவும் பொருளாதார நெருக்கடி தீர்ந்த பின்னரே இந்த நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என்றும் கூறியுள்ளது.

இறுதிப்போரில் நடந்த குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறல் இல்லாமல் நாட்டில் நீடித்த அமைதி சாத்தியமில்லை என்பதை இலங்கை உணரவேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகச் சிக்கல்களை நீடிக்கவிடுவது நாட்டின் முன்னேற்றத்துக்குப் பெரும் தடையாகவே இருக்கும். நாடு முன்னேறுவதற்குப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது முக்கியமானது. கடந்தகாலங்களைப் போன்று சாக்குப் போக்குகளைக் கூறிக் காலத்தைக் கடத்தாமல், இலங்கையில் நடந்த இறுதிப்போரில் இழைக்கப்பட்ட மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தயாராக வேண்டும். தண்டனைகளில் இருந்து விலக்களிக்கும் இலங்கையின் போக்கை மாற்றுவதற்குரிய அழுத்தங்களைப் பிரேரணைகளைத் தாண்டி சர்வதேசநாடுகள் கொடுக்கவேண்டும். அவ்வாறான அழுத்தங்களே இலங்கையின் போக்கை மாற்றும். இல்லாவிட்டால் இந்த நிலைமை இன்னும் பல்லாண்டுகளுக்குத் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## இந்தியாவுடனான ஒப்பந்தங்களை மக்களுக்கு பகிரங்கப்படுத்துங்கள்

### முன்னிலை சோசலிசக் கட்சி வலியுறுத்து

**கொழும்பு, மார்ச் 26**

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வரவுள்ள நிலையில் அவரது நிகழ்ச்சி நிரல் விவரங்கள் அரசாங்கத்தால் வெளியிடப்படவில்லை. ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன என்று இந்திய ஊடகங்கள் கூறுகின்றன. அவற்றை அரசாங்கம் உடனடியாகப் பகிரங்கப்படுத்தவேண்டும்.**

இவ்வாறு முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்போது அவை தொடர்பில் அரசாங்கம் மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். இந்தியாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சில ஒப்பந்தங்களில் கைச்சாத்திருந்தார். ஆனால் அவை தொடர்பாக முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை.

அரசாங்கம் நினைத்தவாறு செயற்படமுடியாது. அதற்கான அதிகாரமும் இல்லை. அதனால் இந்தியாவுடன் கைச்சாத்திடப்படவுள்ள 5 உடன்படிக்கைகளும் எவை என்பது உடனடியாக வெளிப்படுத்தப்பட வேண்டும்- என்றார். (எ-இ)



## பெண் மருத்துவர் துன்புறுத்தல்; சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 26

அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் பெண் மருத்துவர் பாலியல்துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டவரின் விளக்க மறியல் நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்டது.

சந்தேகநபர் நேற்று அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும், பாதிப்புக்குள்ளான பெண் பங்கேற்காததால் அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை என்று தெரியவருகின்றது.

அதையடுத்து சந்தேகநபரை நீதிமன்றம் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது. (எ-இ)

## பிரிட்டன் தடையை வரவேற்கிறார் ஹரி

கொழும்பு, மார்ச் 26

இலங்கை அதிகாரிகளுக்கு எதிரான பிரிட்டன் விதித்துள்ள தடைகளை வரவேற்றுள்ள கனடாவின் நீதி அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி, இது இலங்கையின் பொறுப்புக்கூறலை நோக்கிய முக்கியமான நடவடிக்கை என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் தனது சமூகவலைத்தளத்தில் கணக்கில் பதிவேற்றியுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ, கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராகக் கனடா தடைகளை விதித்ததை அடுத்து, பிரிட்டனும் தடைகளை விதித்துள்ளது.

இலங்கையில் தண்டனையில் இருந்து விடுபடும் கலாசாரத்தை முடிவுக்குக்கொண்டுவருவதற்கும், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் கனடா தொடர்ந்து பாடுபடும்- என்றார். (எ-இ)

## ஆங்கிலம் தெரிந்தால் ருமேனியாவில் வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 26

ஆங்கிலம் பேசக்கூடிய வெளிநாட்டினரை "டக்ஸி" சாரதிகளாகப் பணிக்கமர்த்த ருமேனியா திட்டமிட்டுள்ளது. இலங்கை, நேபாளம், வியட்நாம் நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்த வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், "ஊபர்" போன்ற போக்குவரத்துச் சேவை நிறுவனங்களில் இவர்களைப் பணிக்கமர்த்த ருமேனியா அரசாங்கம் அனுமதித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## ஊழியர்கள் சேமலாப நிதியை செலுத்தாத 22,450 நிறுவனங்கள்

கொழும்பு, மார்ச் 26

22 ஆயிரத்து 450 நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தத் தவறியுள்ளன என்று பிரதித் தொழில் அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார். இவ்வாறு செலுத்தப்படாதுள்ள ஊழியர் சேமலாப நிதியின் மொத்தத் தொகை 36 பில்லியன் ரூபாவாகும். அவற்றை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிலாளர் நலன்கள், வேலைத்தளங்களில் பெண்களின் பாதுகாப்பு, சிறுவர்களைப் பணிக்கமர்த்தல் போன்ற விடயங்களிலும் கவனம்செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-6)

நாளை
வியாழக்கிழமை-பங்குனி- 13
27.03.2025
சுபநேரம் : 07.44- 09.14
ராகுகாலம் : 01.44 - 03.14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 09 . 1942



இறப்பு 23 . 03 . 2025

### திருமதி மகாலெட்சுமி யோகராசா

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியை பிறப்பிடமாகவும் 6/1 பழம் றோட் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி யோகராஜா அவர்கள் கடந்த (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பாக்கியம் அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகசபை நாகரட்னம் அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசபை யோகராஜா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி குணராஜாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மஞ்சுளவல்லி மற்றும் சௌந்தரராஜன், சியாமளா (ராஜி), சசிகலா, சிறீதரன் (கண்ணன் மேற்பார்வையாளர் யாழ்போதனா வைத்தியசாலை), நிர்மலா (மாலா), வத்சலா (செல்வி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலைச்செல்வி, காலஞ்சென்ற அருந்தவராசா மற்றும் தர்மராஜா, புஸ்பாஞ்சலி (கவிதா), தயானந்தம், புஸ்பராஜா (சுரேஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், வித்தியா, சிவசேந்தன், சம்ஷிஹா, பார்த்தீபன், கரீஸ், நிகேதன், நிரூபன் சைலன், சந்தோசிகா, பிரகின், சௌபர்ணிகா, ரிஷிதரன் மற்றும் ரிஸ்னிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் யுவன் ரிஷிகா மற்றும் சஸ்வின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.103.2025) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 27.03.2025 அன்று காலை 8.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சிறீதரன் : 075 424 8709
சௌந்தரராஜன் : 0774007775

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 11 . 1952



மறைவு 25 . 03 . 2025

### அமரர் திருமதி அருள்மணி இந்திரலோகன்

மீசாலை வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருள்மணி இந்திரலோகன் அவர்கள் நேற்று (25.03.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா தெய்வானைப் பிள்ளையின் மகளும் கிருஷ்ணசாமி நகுலேஸ்வரியின் மருமகளும் இந்திரலோகன் அவர்களின் பாசமிகு மனைவியும் டினோஜா (பிரான்ஸ்), நிறோஜா (பிரதி நீர்ப்பாசனப் பணிமனை (மாங்குளம்) அவர்களின் பாசமிகு தாயாரும் துஸ்யந்தனின் (பிரான்ஸ்) பாசமிகு மாமியாரும் குலராசசிங்கம், காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், தவமணி ஆகியோரின் உடன்பிறப்பும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2025) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

077 287 6328
0033 69 882 0701 (பிரான்ஸ்)

தகவல்:
குடும்பத்தினர்

(CS2815) V-1

## கண்ணீர் அஞ்சலி



எமது சைவத்தின் பெருவிருட்சமாய்
அந்தணர் குலத்தின் அகல் விளக்காய்
நித்திய நைமித்திய கிரியைகளின்
அதி சிரேஷ்டராய்
அறிவு, அறம், நீதி, ஆசாரம் ஒழுக்கம்
நிறைந்த அந்தணர் பரம்பரையை
உருவாக்கி வளர்தெடுத்த
தர்மசாஸ்தா குருகுல அதிபதி
காயத்திரி பீட
நிறுவுநரும் அதிபருமாகிய



சிவாகம கலாநிதி, வேதாகம மாமணி

### சிவஸ்ரீ தாணு மகாதேவ குருக்கள்

அன்னை மடியில்
07.12.1937

இறைவனடியில்
25.03.2025

அவர்களின் ஆன்மா ஆடவல்லான் பாதங்களில்
அமைதிபெற அஞ்சலிக்கின்றோம்.

திருநெல்வேலி பழங்கிணற்றடி
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்.

(CS 2812) A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அதிபர் சி.சிவநாவலன் தலைமையில் அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரும் பழைய மாணவருமான இ. சசீலன் பங்கேற்றார். (ச-22,159)



## அன்னை பூபதி நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 26
நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் ஆரம்பநாள் நிகழ்வு கடந்த புதன்கிழமை கொக்குவில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், மூத்த போராளியுமான பொன் மாஸ்டர் தலைமையில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மூத்த எழுத்தாளர் மு.ஈழத்தமிழ்மணி, தமிழ்த்தேசியப் பேரவையின் யாழ்.மாநகரசபை முதன்மை வேட்பாளர் தீபன் திலீசன் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22,66)

## கசிப்புக் காய்ச்சுமிடம் பொலிஸாரால் முற்றுகை

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் சட்டவிரோதக் கசிப்பு உற்பத்திசெய்யும் இடம் ஒன்று நேற்றுமுன்தினம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் தப்பியோடியுள்ள நிலையில், 2 ஆயிரத்து 250 மில்லிலீற்றர் கோடாவும், 20 லீற்றர் கசிப்பும், உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-25,113)



## உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களைத் தேர்ந்தெடுங்கள்

### மாதர் அபிவிருத்தி ஒன்றியம் அழைப்பு

மன்னார், மார்ச் 26
நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் பெண்கள் அனைவரும் பெண் வேட்பாளருக்கு வாக்களிக்கவேண்டும் என்று மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றிய இணைப்பாளர் மஹாலட்சுமி குருசாந்தன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலிலே ஒவ்வொரு வட்டாரத்திலும் போட்டியிடும் பெண்களுக்கு நாம் ஆதரவை வழங்கவேண்டும். எதிர்காலத்தில் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளையும் நலத்திட்டங்களை யும் வெற்றிகொள்ள இது வழிவகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-213)

## பொலிஸ் வீரர்கள் தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா, மார்ச் 26
உயிர்நீத்த மற்றும் போரில் உயிரிழந்த பொலிஸாரின் 161ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் வன்னி மற்றும் கிளிநொச்சிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சமாந்த வியஜசேகர தலைமையில் வவுனியா வன்னிப் பிராந்திய பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரத்ன வியஜமுனி, வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அசோக குமார, வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடி, உயிரிழந்த பொலிஸாரின் குடும்ப உறுப்பினர்கள், ஓய்வுபெற்ற பொலிஸார், வவுனியாப் பொலிஸ் அத்தியட்சகர், வவுனியாப் பிரிவிலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸார் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ச-41-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரிட்டனின் தடை...

சிறிசேன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- எமது தாய்நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டுக்காக பாதுகாப்புத் தரப்பினர் போராடியுள்ளனர். அவர்கள் மனிதர்களைக் கொல்லவில்லை. மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை. போரின் இறுதிக் கட்டத்தில் லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வரும்போது இராணுவத்தினரே அவர்களைப் பாதுகாத்தனர். மாறாக இனவாத நோக்கில் செயற்படவில்லை. நான் ஐந்து தடவைகள் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்துள்ளேன். போரின் கடைசி இரு வாரங்களில்கூட நானே பதில் பாதுகாப்பு அமைச்சர். பிரபாகரன் மரணிக்கும்வேளையும் அந்தப்பதவியில் நான் இருந்தேன். எனவே, என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும். பிரிட்டனின் நடவடிக்கை அநீதியாகும். தடை விதிக்கப்பட்டுள்ள எமது நாட்டின் முன்னாள் படைத் தளபதிகள் தளரக்கூடாது, அவர்கள் தைரியமாக இருக்க வேண்டும். அவர்களுக்கு பின்னால் நாடு உள்ளது' - என்றார். (அ-ம-44)

### மஹாதேவ...

தேவக் குருக்கள் பங்காற்றியுள்ளார். பல்மொழி ஆளுமை மிக்கவராக, அன்புடன் அனைவரையும் அரவணைக்கும் பண்பாளராகத் திகழ்ந்த அவர், இந்தியாவில் உள்ள முதன்மையான ஆதீனங்கள்கூட அரவணைக்கும் ஆளுமையாளராகவும் திகழ்ந்தார். அவர் அண்மையில் தருமை ஆதீன 27ஆவது நட்சத்திர குருமணிகளால் 'சிவாகம கலாநிதி' எனும் கௌரவம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

### பாற்பண்ணை...

தொடர்பில் கோரிக்கைக் கடிதமொன்றை வழங்குமாறு பிரதேச செயலருக்கு இராணுவம் அறிவுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே, இராணுவத்தால் பாற்பண்ணைப் பகுதியில் அடாத்தாகக் கையகப் படுத்தப்பட்டுள்ள காணி தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்தே, அந்தக் காணியை விடுவிக்கக் கோரும் வகையில் கோரிக்கைக் கடிதமொன்றைச் சமர்ப்பிக்குமாறு தொடர்புடைய இராணுவ அதிகாரி தெரிவித்தார். (அ-ம-125-26)

### ஹெரோய்ன்...

கடந்த 23ஆம் திகதியன்று தனது நண்பரின் வீட்டுக்குச் சென்ற அவர், நேற்று முன்தினம் மாலை மயங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இதையடுத்து, யாழ். போதனா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் முன்னதாகவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

ஊசிமூலம் அளவுக்கு அதிகமான ஹெரோய்னை நுகர்ந்தமையே இறப்புக்குக் காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### விபத்தில்...

படுகாயமடைந்த முதியவர் ஒருவர், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார். குருசாமி கணேசலிங்கம் (வயது 82) என்ற முதியவரே உயிரிழந்தவராவார். மோட்டார்சைக்கிளில் சென்ற அவரை, ஊர்காவற்றுறை பாலக்காட்டு நாற்சந்தியில் வைத்து பேருந்தொன்று மோதியுள்ளது. இதையடுத்து படுகாயமடைந்த அவர், யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

**The Royal College of Jaffna**
தனியார் கல்வி நிறுவனம், சங்கானை.
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில BY. ந. விக்னேஸ்வரன்
ஆசிரியர், பிரான்பற்று வீதி, சங்கானை.
பிரதேச செயலகம் அருகில்
**Tel: 077 675 1649**

**வேலையாட்கள் தேவை**
கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு பொதியிடுதல் வேலைக்கு ஆட்கள் தேவை.
பெண்கள் விரும்பத்தக்கது.
சம்பளம்: - 35000/-
**077 7885 039**

**வேலையாட்கள் தேவை**
கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு வாகன உதவியாளர் தேவை.
**076 096 9728**

**வாடகைக்கு / குத்தகைக்கு**
யாழ். இந்துக் கல்லூரி,
யாழ் ஆரம்ப பாடசாலைக்கு அருகில் மேல் வீடு.
3 இணைந்த குளியலறைகள்.
3 அறைகளுடன், வாகனத்தரிப்பிடம்
2 வருட வாடகை / குத்தகைக்குண்டு.
6 மாத முற்பணம்.
தொடர்பு: **076 113 9132**


**தொழிலாளர் தேவை**
தனியார் நிறுவனத்தினூடாக இலங்கை மின்னசார சபை சுன்னாகத்தில் தோட்ட வேலை செய்யக் கூடிய ஆண் தொழிலாளர்கள் உடன் தேவை.
தொடர்புகளுக்கு:
**077 623 9122**

# மணிவிழா வாழ்த்து

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றி 2025.03.26 ஆம் திகதியன்று பணி ஓய்வுபெறுகின்ற

**உயர்திரு. S.R.சர்வேந்திரன்** அவர்களுக்கான

**(BA, PG Dip. (Pub.Ad.), Dip (Plan.), MA (Dev.Stu.)**



### மணிவிழா வாழ்த்துப் பாமாலை

அரச பணிதன்னில் ஆண்டு பலவாய்
தரமுயர் சேவையினைத் தந்தீர் - உரமான
திட்டங்கள் பற்பல தீட்டியே நின்றவரே
இட்டமுடன் வாழி இனிது.

மணிவிழாக் காண்கின்ற மாமேதை யாமெங்கள்
மாண்புறு சர்வேந்திரன் தானும்
அணிபுகழ் பெற்றிருந்த அவனியது போற்றிட
அரச பணியினில் மிளிர்ந்தார்
துணிவுடன் கருமங்கள் தூய்மையாய் செய்தார்
துலங்கணும் வாழ்வினை வாழ்த்தி
அணிதிரண்டு நாமின்று அன்னவரைப் போற்ற
ஆண்டுகள் பலவாய் வாழியவே !

நேர்மை நிதானமொடு நிறைபணி ஆற்றினீர்
நிறைவான புகழதும் பெற்றீர்
பார்தனில் உம்புகழும் பரவியே இருந்திடப்
பண்பினில் சிறந்துமே மிளிர்ந்து
ஊர்புகழ் உத்தமனாய் உண்மையின் சிகரமாய்
உயர்ந்த பணிகளும் செய்தீர் !
சீர்பெறப் பல்லாண்டு செகமதில் வாழ்ந்திடச்
செப்புகிறோம் வாழ்த்து நாம் வாழியவே

நயமுறு அல்வாய் நற்றமிழ் மண்ணின்
நன்முத்தாய் எழுந்திட்ட நாதனே
செயலகம் பலவற்றில் சேவையும் செய்தீர் !
தென்மராட்சி மண்ணிற் புகுந்தீர் !
முயன்றுமே வாழ்வில் முன்னேற்றங் கண்டீர் !
முழுநிறை வாழ்வையும் பெற்றீர் !
இயலுறு நற்பணிகள் இயற்றியே இருந்துநீர்
இப்புவி போற்றிட வாழியவே.

**சேவை விபரம்**

| பதவி | சேவை ஆற்றிய இடம் | சேவைக் காலம் |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் | - 18.08.1994 - 14.05.1997 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேச செயலகம், மருதங்கேணி<br>மாவட்ட திட்டமிடல் செயலகம், யாழ்ப்பாணம் | - 15.05.1997 - 23.06.2009 |
| உதவி திட்டமிடல் பணிப்பாளர் | மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் | - 24.09.2009 - 08.11.2015 |
| உதவி திட்டமிடல் பணிப்பாளர் | பிரதேச செயலகம், நெடுந்தீவு | - 09.11.2015 - 31.07.2017 |
| உதவி திட்டமிடல் பணிப்பாளர் | பிரதேச செயலகம், வேலணை | - 01.08.2017 - 18.10.2020 |
| உதவி திட்டமிடல் பணிப்பாளர் | மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் | - 19.10.2010 - 02.05.2021 |
| உதவி திட்டமிடல் பணிப்பாளர் | பிரதேச செயலகம், தென்மராட்சி | - 03.05.2021 - 26.03.2025 |

Congratulations!

**வாழ்த்துவோர்:**
**பிரதேச செயலாளர்,**
**பதவிநிலை உத்தியோகத்தர்கள்,**
**மற்றும் பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள்**
**பிரதேசசெயலகம் தென்மராட்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# ஓவியர் மாற்கு என்னும் ஆளுமை

■ பப்சி மரியதாசன்

எனது 24ஆவது வயதில் நான் ஓர் ஆசிரியராகப் பணியேற்றபின் எனக்கு மிகவும் பிடித்துப்போன சித்திர ஆசிரியரான ஓவியர் மாற்குவைச் சந்தித்தேன். திருமறைக் கலாமன்றத்தால் ஓவிய வகுப்புக்கள் நடாத்தப்பட்ட வரவேற்பறையின் மத்தியில் சிறுவர்கள் புடைசூழ சிறுவருள் சிறுவராக சித்திரம் வரைய வழிகாட்டிக்கொண்டிருந்த எளிமையான, இனிமையான ஒரு சித்திர ஆசிரியராக எனக்கு அறிமுகமானார். அன்றுமுதல் இன்றுவரை என் நினைவுகளில் தனியான இடம் பிடித்துக்கொண்டவர்தான் ஓவியர் மாற்கு.

அழகியல் என்பது பொதுக் கல்விப் பாடமாக 1972ஆம் ஆண்டிலிருந்து இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டது. அழகியல் பாடம் அதன் இலக்கை அடைந்துள்ளதா என்ற கேள்விக்கு விடை திருப்திகரமானதாக அமையப் போவதில்லை. ஆனால் அந்த நோக்கங்களை வாழ்வாகக்கொண்ட மிகச்சிலருள்; தயக்கமின்றிச் சுட்டிக்காட்டப்படக்கூடிய ஒருவரே மாற்கு என்னும் மாமனிதர்.

## இரசனையும் மாற்குவும்

இயற்கையை மிகவும் இரசித்தவர் ஓவியர் மாற்கு. அவர், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களுக்கு எங்களை அழைத்துச் செல்வார். நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கோட்டை, மணிக்கூட்டுக் கோபுரம், புல்லுக்குளம், சற்று அப்பால் பண்ணைக் கடற்கரை, யாழ் நகரை தீவுப் பகுதியுடன் இணைக்கும் மரப்பாலம், அல்லைப்பிட்டிப் பனங்கூடல், மணியந்தோட்டம், மண்ணித்தலை போன்ற நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளின் காட்சிகள் எங்கள் கைகளுக்குள் கோடுகளாகவும், வர்ணங்களாகவும் சிக்கிக்கொள்ளும். கடதாசிகள், வர்ணச் சுண்ணக்கட்டிகள், பொல்லி பென் என்று அழைக்கப்பட்ட கறுப்பு மைப்பேனா, இந்தியன் மை போன்ற ஊடகங்களைக் கொண்டு இயற்கையை இரசித்தலுக்கான கற்றல் இயல்பாக நடைபெறும். அழகான, எளிமையான சித்திரங்கள் எங்கள் வசமாகும். பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவை ஒரு காட்சிப்பொருளாகும்.

இப்படியான வெளிக்களக் கற்கையின்போது அவ்வப் பிரதேசங்களில் கிடைக்கக்கூடிய சிப்பிகள், சங்குகள், கற்கள் முதல் அழுகுத் தாவரங்கள் ஊமல் கொட்டைகள் எனப் பல பொருள்களுக்கான சேகரிப்பும் நடக்கும். பின்பு அவை கழிவுப்பொருள் கலை ஆக்கங்களாக மாற்றம் பெறும். தனக்குப் பின்னால் வருகின்ற படையணிக்கு இவ்வாறுதான் இயற்கையை இரசிக்கச் சொல்லித் தந்தார் ஓவியர் மாற்கு.

## மாற்குவின் மனப்பாங்கு

மாற்கு பணபலம் படைத்தவரோ, மேட்டுக் குடியினரோ அல்ல. சராசரி யாழ்ப்பாண நடுத்தரக் குடும்பப் பின்னணியைக் கொண்டிருந்தவர். தனது குடும்பத்திற்காக செலவிடவேண்டிய தனது நேரத்தையும் உழைப்பையும் எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் பொது நோக்கிற்காகவே செலவிட்டார். அவரிடம் ஒரு நல்லிதயம் இருந்தது. யாரையும் கடிந்துபேசிப் பார்த்ததாக ஞாபகமில்லை. வியாபார நோக்குடன் படைப்புகளில் ஈடுபட்டதுமில்லை. யார் எதைக் கேட்டாலும் தன்னால் இயன்றவரை உதவுவதற்கு பின்னின்றதையும் பார்த்ததில்லை. மாணவர்கள் மத்தியில் உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஏழை பணக்காரன் என்ற பாகுபாட்டை அவரது சிறிய சித்திர கூடம் என்றுமே இனங்காட்டியதில்லை.



அவரது அயராத உழைப்புக்கு உரிய அங்கீகாரம் கிடைக்காதபோதும், சந்தர்ப்பங்கள் பல மறுக்கப்பட்ட சூழலிலும், அவரை நோக்கிக் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட வேளைகளிலும்கூட சலனமற்ற நதிபோல அவரது ஓவிய வாழ்வு ஓடிக்கொண்டே இருந்தது. எந்தக் கலங் [illegible] ஏற்றுக் கொள்ளும் மனதுடன் தனது தேடலையும் முயற்சிகளையும் முடிவிலியாக்கிக் கொண்டேயிருந்தமையினால் தவிர்க்க முடியாதவகையில் வரலாறு அவரைப் பதிவுசெய்துகொண்டது.

## ஆக்கச் சிந்தனை நிறைந்தவர்

தனது படைப்புலகுக்குள் நின்றுகொண்டு கிடைக்கின்ற எந்தச் சந்தர்ப்பங்களையும் பயனுறுதிமிக்கதாகப் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றல் அவருக்கிருந்தது. திருமறைக்கலாமன்றத்தில் தான் கற்பித்த காலத்தில் வருடாவருடம் தைப்பொங்கல் தினத்தையொட்டி மாணவர்களின் ஓவியக் கண்காட்சி ஒன்றை நடத்தும்; திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்தினார். இத்தகைய காட்சிப்படுத்தல்கள் மாணவரின் திறன்விருத்திக்கு சிறந்த களம் அமைத்துக்கொடுத்தன. அப்போது யாழ் மாநகர மேயராக இருந்த சுந்தரம் டிவகலாலாவின் ஆக்க சிந்தனையும் ஓவியர் மாற்குவின் ஆக்க சிந்தனையும் இணைந்து ஓவியக் கண்காட்சி ஒன்று அக்காலப்பகுதியில் நடத்தப்பட்டது. விடுதலைப் போராளிகளால் ஒழுங்கமைக்கப்பட்ட கண்காட்சிகளையும் சிறப்பாகப் பயன்படுத்தினார். அவரது வாழ்க்கைச் சூழலின் வாழ்வனுபவங்கள் அனைத்தும் கதைகளும், நிகழ்வுகளும் ஓவியமாக மாறிக்கொண்டிருந்தன. 1960களில் 'கழுவுதற் பாணி நீர்வர்ண ஓவியங்கள், யாழ்ப்பாணப் பெண்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் 'அலங்காரம்' என்னும் தலைப்பிலான தொடர் ஓவியங்கள், 'சல்லாபம்' என்னும் தலைப்பிலான தொடர் ஓவியங்கள், சகுந்தலை, தமயந்தி போன்ற இலக்கியப் பெண்களின் தொடர் படைப்புகள் இன்றும் உயிரோட்டத்துடன் நினைவில் நிறைந்துள்ளன.


இந்துக் கடவுளர்களான சிவன், பார்வதி ஆகிய இருவரும் இணைந்த அர்த்தநாரீஸ்வரர், சிவ தாண்டவம், விநாயகர் எனப் பலவும் நவீனத்துடன் கலந்த கலைவெளிப்பாடாக மிளிர்ந்தன. இயேசுவின் சிலுவை மரணம், யேசுவின் திருமுகம், மகனை மடியில் ஏந்திய வியாகுலத்தாய், தமிழ் அடையாளங்களை உள்வாங்கி கலாசாரமயப்படுத்தப்பட்ட இயேசு போன்றவை கிறிஸ்தவக் கடவுளரை மையப்படுத்திய சில ஓவியங்களாகும்.

அழகியலில் அடுத்துள்ள கலைகளையும் ஓவியமாக்க ஓவியர் மாற்கு தவறவில்லை. காவடியாட்டம், நாதஸ்வரக் கச்சேரி, தவில் வாசிப்பு, இராகங்களின் சங்கமம் என இசையும், நடனமும், நாடகமும் இலக்கியமும் ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் உருப்பெற்றன. அச்சில் வரும் வண்ணப்படங்களை உருமறைப்புச் செய்து படைத்த ஓவியங்கள் இவரின் மற்றுமொரு தனித்துவமான கண்டுபிடிப்பாகும்.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு என்பதேது?



நம்மவர்களிடையே மறைந்துகொண்டிருக்கும் ஒன்றைச் சொல்லவேண்டுமென்றால், அது மனிதர்கள் அழகைப் பார்க்கும் பார்வைதான். நான் இங்கு பேசுவது முகத்தின் அழகைப் பற்றியல்ல, மனதின் அழகைப் பற்றித்தான். ஒருவரின் மனம் சுத்தமாக இருந்தால், அவரது முகம் தானாகவே பிரகாசிக்கும். ஆனால் இன்றைய சமூகம் எப்படி இருக்கிறது? ஒருவரின் தோற்றத்தைப் பார்த்து கேலிசெய்வது, நிறத்தைக் குறைத்து மதிப்பிடுவது, உடல் அமைப்பைக் கிண்டலடிப்பது இவை அனைத்தும் நாம் மன அழகை இழந்துவிட்டோம் என்பதற்கு ஆதாரங்களாகும்.

உண்மையான அழகு என்பது வெளியே தெரியும் தோற்றத்தில் அல்ல, உள்ளே மறைந்திருக்கும் பண்பாட்டில்தான் இருக்கிறது. ஒரு குழந்தையின் கொழுப்பு அழகு, ஒரு கிழவியின் ஒல்லித்தன்மை அழகு, நரைத்த தலையில் அப்பாவின் அனுபவம் அழகு, அம்மாவின் சிரித்த முகம் அழகு இப்படி ஒவ்வொருவருக்கும் தனித்துவமான அழகு உண்டு.


'அழகைப் பற்றி கனவு காணாதீர்கள், அது உங்கள் கனவுகளைப் பாழாக்கிவிடும்' என்று அணு விஞ்ஞானி அப்துல்கலாம் ஒரு முக்கியமான கருத்தைச் சொல்லியிருக்கிறார். அத்தனையும் உண்மையான வார்த்தைகள்.

அழகு என்ற கருத்து எம் மனதில் ஆழமாய் வேரூன்றியிருக்கிறது. ஆனால் அது வெளித்தோற்றத்தை நோக்கி அல்ல, உள்ளிருந்து வரும் ஒளியை நோக்கித்தான் இருக்க வேண்டும். எம் எதிர்கால சந்ததியினர் வெளியே தேடாமல், உள்ளே தேடும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதுவே உண்மையான முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

நாம் அனைவரும் மன அழகை மீண்டும் கண்டுபிடிக்க வேண்டிய காலம் இது. ஒருவரின் தோற்றத்தைக் கண்டு தீர்மானிக்கும் பழக்கம் மாறி, ஒருவரின் பண்பாட்டைக் கண்டு மதிக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டும். அப்படி ஒருநாள் வந்தால், அதுவே நம்முடைய சமூகத்தின் உண்மையான வெற்றியாக இருக்கும்.

**பார்த்திமன் அபிநஜா**
திருவையாறு, கிளிநொச்சி

# நீர் உள்ளவரை வாழ்வு...!



நதியோரம் நிலைபெற்ற
நீர் வள நாகரிகம்
போத்தல் நீருக்காய்
போர் செய்யும் காலம் இது!

தூரநோக்கு இல்லாத
துயரச் சுயநலத்தால்
நிகரற்ற நீர்நிலைகள்
உயிரற்று கிடக்கின்றவே!

ஆலைகளின் கழிவுகளும்
ஆழ்கடல் விபத்துகளும்
கீழ் அணுச்சோதனையும்
வேரோடு உயிர் அழிக்கும்!

எக்கணமும் சிக்கனமாய்
நீரமுதம் காத்தாலே
தொல் புவியும் தப்பிவிடும்!
பல்லுயிரும் கைகூப்பும்!

**இரா.ஜெயக்குமார்**

புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
யாழ்ப்பாணம்.
0773165555

# ஓவியர் மாற்கு...

போரின் உக்கிர தாண்டவம் தொடங்கியபோது தவிர்க்க முடியாதபடி சனத்தின் அவலங்கள் பதிவாகத் தொடங்கின. வரைதல் ஊடகங்களின் கிடைப்பனவு இறுக்கமானபோது வெள்ளைத்தாளில் கறுப்புமையால் வரையப்பட்ட ஓவியங்கள் போரின் அச்சத்தையும் அவதியையும் புலப்படுத்தி அர்த்தத்துடன் வெளிப்பட்டன. இவ்வாறு சலிப்பில்லாத அவரது தேடலும் உழைப்பும் ஆக்கத்திறன் மிகுந்த படைப்பாளியாக அவரை உயர்த்தி இருந்தன. அற்புத மனிதன். அழகியல் ஆசான். இனியவை உரைத்து இயல்பாய் வாழ்ந்தவர். போட்டியில்லை பொறாமையில்லை. பட்டமும் பதவியும் நாடிப் பெற்றதுமில்லை. இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தார். மனிதநேயத்துடன் மாண்பாக வாழ்ந்தார்.

எனது இருபத்து நான்காவது வயதிலிருந்து நாற்பது வயதுவரை, ஆரம்பத்தில் அன்றாடம், வாராவாரம், மாதத்திற்கொரு தடவை என அவரை சந்தித்துப் பேசிய, பழகிய, தேடிய, படைத்த காலங்கள் அனுபவத் திரட்சியாக என்னுள் உறைந்திருக்கின்றன. இடப்பெயர்வு எம்மைத் திசைக்கொன்றாய்ப் பிரித்த பின்பும், பிறிதோர் நாளில் மன்னார்க் கல்விவலயம் நடத்திய கல்விக் கண்காட்சியின்போது நாங்கள் அருகருகே காட்சிக்கூடங்களை அமைத்திருந்தோம். சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி காட்சிகளை ஒழுங்கமைத்த அவர் எனதும் எனது மாணவர்களினதும் காட்சிக்கூடத்தைப் பார்வையிட்டு உற்சாகம் தந்தார். அதுதான் அவருடன் இறுதிச் சந்திப்பு என அப்போது அறிந்திருக்கவில்லை.

ஒரு மாலைப்பொழுதில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மாலைச் செய்தியறிக்கையில் வடக்கின் பிரபல ஓவியர் மாற்கு காலமானார் என்ற செய்தி கேட்டு இதயம் ஒரு கணம் அதிர்ந்தது. ஊரடங்கு நீங்கி மறுநாள் காலை இல்லம் நாடிச்சென்றபோது எல்லாம் முடிந்திருந்தது. மாற்கு என்னும் அழகியல் ஆளுமை நீண்ட அமைதியில் ஆழ்ந்து போனது. நிலைத்த நினைவைத் தந்து போனது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசபந்து பணிநீக்கம்; எதிர்க்கட்சி ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 26

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனைப் பதவிநீக்கம் செய்வதற்குரிய பிரேரணைக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபரை பதவி நீக்குவதற்காக தேசிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான அஜித் பி பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தேசபந்து தென்னகோனை நியமிப்பதற்கு முயற்சிக்கப்பட்டவேளை அதனை நாம் கடுமையாக எதிர்த்தோம். அவரின் நடத்தை தொடர்பில் நம்பகத்தன்மை இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே இன்றும் உள்ளோம்.

அந்தவகையில் மேற்படி பிரேரணைக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும்- என்றார். (ச-44)

# நடமாடும் சேவை

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான வருமான சேகரிப்பு தொடர்பான நடமாடும் சேவை பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளில் ரீதியாக இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் சேவையில் வியாபார உரிமம், சைக்கிள் உரிமம், நாய்களுக்கான உரிமம், கட்டட அனுமதி விண்ணப்பங்கள் வழங்கல் மற்றும் ஆதனவரி அறவீடு போன்ற சேவைகள் வழங்கப்படுமென செயலாளர் திருமதி தர்சினி தயானந்தன் அறிவித்துள்ளார்.

அதன்படி இன்று புதன்கிழமை இத்தாவில், புலோப்பளை மேற்கு, இயக்கச்சி ஆகிய பிரிவுகளிலும், நாளை வியாழக்கிழமை அரசர் கேணி, பளை நகரம், சோரன்பற்று ஆகிய பிரிவுகளி லும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கச்சார்வெளி, முல்லையடி, தர்மக்கேணி ஆகிய பிரிவுகளிலும் நடமாடும் சேவை இடம்பெறுமெ அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 01 . 1932

மறைவு 24 . 03 . 2025

## தம்பித்துரை சரஸ்வதி

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பித்துரை சரஸ்வதி நேற்று முன்தினம் (24.03.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்தம்மா தம்பதியின் அன்பு மகளும், தம்பித்துரை அவர்களின் மனைவியும், நாகரத்தினம் அவர்களின் சகோதரியும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (பரம்சோதி) அவர்களின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற உமாதேவியின் மாமியாரும், பிரதீபா, பிரசன்னா (பிரான்ஸ்), பிரசாத் (கனடா), பிரவீனா (கனடா), குமணன், கார்த்தி, காலஞ்சென்ற அசோக்குமார் ஆகியோரின் பேர்த்தியும், பிரதீஷ், பிரிதிகா, ஹரீனா, ஜஸ்ஷஜோதி, அகிலா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**141/41, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 088 4631**

(CS/57833) J-1


# மூன்றாம் ஆண்டு குருபூசைதினம்

(பங்குனி அவிட்டம் 26.03.2025)
2022 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 29 ஆம் நாள்
ஜீவப்பிரம்ம ஐக்கியப்பேறு பெற்ற எமது குடும்பத்தின் ஆன்மீக ஒளிவிளக்கு
காங்கேய வாகீசர் கலாபூஷணம்

## சிவத்திரு. வல்லிபுரம் குமாரசாமி ஐயா

(ஓய்வுபெற்ற நூலகப் பொறுப்பாளர்)

ஞான உதயம் 23 . 03 . 1945



பிரம்ம ஐக்கியம் 29 . 03 . 2022

ஞான விளக்காய் நல்லொளி வீசி
நம்மையெல்லாம் நல்லவராக்கி
நல்லறிவூட்டி தந்தையாய், தாயாய்
தமையனாய் நல்லாசானாய்
குருவாய் எமக்கு வாய்த்து
குவலயம் தன்னில் எம்மை
குணமுடையவராய் வாழவைத்த
எங்கள் குலதெய்வமே !

மூன்று ஆண்டுகள் கடந்து விட்டதோ
எங்கள் குருவின் முகம் பாராமல்
என்று கண்ணீர் பெருகும்வேளை
இல்லை இல்லை உன்னுள்ளே தான்
நான் உள்ளேன் எனைக்கண்டு கொள்
என்று எம்மை ஆறுதல் படுத்துவதை
எம் மொழியால் இயம்பிடுவோம்
எங்கள் குல தெய்வமே!

எங்களுடன் நீங்கள் வாழ்ந்தகாலத்தில்
எமக்கு உரைத்த உண்மைகளை
இன்று அனுபவத்தில் உணர்ந்து
- தெளிந்துவிட்டடோம்
ஆனாலும் எமைவிட்டு நீங்கள் சென்றபின்
நாம் ஒன்றுமே இல்லாதவராய் ஆகிவிட்டோம்
- என்பது உண்மையே
உங்கள் அடிபணிந்து உங்கள் வழி சென்று
உயிருள்ளவரை உண்மை பொருளில்
உங்கள் உருவை உணர்ந்து வணங்குவோம்
- ஐயனே!

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**"அருள்பவனம்"**
**சூராவத்தை, சுன்னாகம்.**

**பாசமுள்ள உங்கள் உறவுகள்**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## சிவஸ்ரீ தாணு மகாதேவ குருக்கள்

தர்மசாஸ்தா குருகுல அதிபர் காயத்திரி பீடஸ்தாபகர் எங்கள் அன்பிற்குரிய தந்தை சிவஸ்ரீ தாணு மகாதேவகுருக்கள் இறைசாயுச்சத்தை எய்தி விட்டார். அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (26.03.2025) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கோண்டாவில் துரையப்பா வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள், மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 629 4342**

(CS/2810) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகலா முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு

16 • 04 • 1972



உதிர்வு

06 • 04 • 2024

# மகேஸ்வரன் மதீசன்

உரிமையாளர் - (Mahanathy Tex- Jaffna, Sankamam Tex - Jaffna, Jaffna Electricals Showroom - Jaffna, Malabar Electricals - Jaffna, ABEE (Pvt) Ltd - Colombo, Colour Pluz - Jaffna, Jay Jay Colours - India)

**திதி : அபரபட்ச துவாதசி (26.03.2025)**

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறவில்லை ஐயா உன்
இழப்பை. பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
எம்முடன் சகல செல்வத்துடனும் வாழ்ந்த என் மகனே!
நீ எங்கே ஐயா எம்மை விட்டுச் சென்றாய் ? நீ உலாவந்த
வீதி எல்லாம் இங்கே பாசி படர்ந்ததையா கண்மூடி முழிக்கும்முன்
ஏன் ஐயா அந்தக் காலன் உன்னைக் கவர்ந்து சென்றான்
பட்டமரம் நான் இங்கே இருக்க பச்சை மரத்தை
ஏன் ஐயா முறித்துச் சென்றான் ? நீ கண்ட கனவுகளையெல்லாம்
உன் மனைவி, பிள்ளைகள், சகோதரர்களின் தோள்களில்
இறக்கிவைத்துவிட்டு இறைவனடி சேர்ந்தாயோ! அல்லும் பகலும்
உனை நினைக்காத நேரமில்லை ஐயா! எங்கு பார்த்தாலும்
உன் அழகு முகம் தானே ஐயா எங்கள் முன் தோன்றுகிறது.
நீ எம்மை விட்டு அவசரமாக அற்ப ஆயுளில் விண்ணோக்கி
சென்றாலும், எம் நினைவைவிட்டு மறையாமல் எம்முடன்
வாழ்ந்து கொண்டேஇருக்கின்றாய் என்றும்
உன் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**என்றும் உன் நினைவில் வாழும்**
**மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.**

(CR/44450) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலை...

அதன் முதற்கட்டமாக யாழ்.பல்கலைக் கழக நிர்வாகம் இது தொடர்பில் எடுத்த நடவடிக்கை தொடர்பில் கேள்வி கேட்டு விளக்கக்கடிதம் ஒன்றும் ஆணைக்குழு வால் அவசரமாக அனுப்பப்பட்டுள்ளதா கவும் நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.
கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கையின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாக முன்றலில் தேசியக்கொடி ஏற்றப்பட்டி ருந்தது. ஆயினும் அதனை பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் கீழிறக்கிவிட்டு, அதற்குப் பதிலாகக் கறுப்புக்கொடியை ஏற்றியிருந்தனர். இது தொடர்பான காணொலி சமூக ஊடகங்களிலும் வெளி யாகி இருந்தது.
இந்தநிலையில் அத்தகையதொரு சம்ப வம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றதா என்பது தொடர்பிலும், இடம் பெற்றிருந்தால் அதுதொடர்பில் பல்க லைக்கழக மட்டத்தில் எடுக்கப்பட்ட நடவ டிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக் குமாறும் யாழ். பல்கலைக்கழக நிர்வா கத்தைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எழுத்துமூலம் கோரியுள் ளது.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதா கக் கூறப்படும் ஒன்பது மாணவர்களின் விவரங்களை புகைப்படங்களுடன் அனுப்பி வைத்துள்ள பல்கலைக்கழக ஆணைக்குழுத் தலைவர், சம்பவம் தொடர்பில் முழுமையான அறிக்கை ஒன்றையும் கோரியிருக்கின்றார் என வும் தெரிவிக்கப்படுகிறது.
பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள் ளப்பட்ட விசாரணைகள் மூலமே குறித்த 9 மாணவர்களின் விவரங்களும் ஒளிப் படங்களுடம் பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள தாகவும், அதனை அடிப்படையாகவைத்தே யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு குடைச்சல் கொடுத்து, அந்த மாணவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மானியங்கள் ஆணைக்குழு முயல்வதா கவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-01)

## யாழ்...

வரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பா ணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை இந்தக் கூட்டம் ஆரம்பமானது.
ஒவ்வொரு விடயதானங்களின்போதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமக்குள் தொடர்ச்சியாக சீறிப்பாய்ந்து கொண்டிருந்தனர். அத்துடன், நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவர், அரச அலுவ லர்கள் மீதும் சரமாரியான விமர்சனங் களை முன்வைத்தார். அதிகாரிகள், திணைக்களத் தலைவர்களை இலக்கு வைத்து அவர் வசைபாடிக் கொண்டிருந் தார்.

**சிறீதரன் எம்.பி. வெளிநடப்பு**

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நோக்கத்தின் குறைந்தபட்ச இலட்சணம் கூட இல்லாமல் கூட்டம் நடைபெறவேண் டிய நிலையேற்பட்டது. இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் இருந்து இடைநடுவே வெளியேறினார். கூட்டத்தைக் கட்டுக் கோப்பில் வைத்திருக்க முடியாமல் அதை நடத்திக் கொண்டிருந்த தலைமை யையும் சிறீதரன் விமர்சித்திருந்தார்.
இடையூறுகளும், வாக்குவாதங்களும் தொடர்ந்த நிலையில் ஒருகட்டத்தில் பொறுமையிழந்த அமைச்சர் சந்திரசே கர், குழப்பம் விளைவித்துக்கொண்டி ருந்த நாடாளுமன்ற உறுப்பினரை ஒரு மையில் விளித்து, அமைதியாக இருக் கும்படி அதட்டியபோதும், நிலைமை கட்டுக்குள் வரவில்லை. இதனால், ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கைவி டப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.


**அபிவிருத்திகள் தொடரும்**

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கைவி டப்பட்டமை தொடர்பில், அதன் தலைவ ரான அமைச்சர் சந்திரசேகர் கூட்டம் முடிந்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்ததாவது:-
வரவு செலவுத்திட்ட கூட்டத்தொடர் முடிவ டைந்துள்ள நிலையில், யாழ்.மாவட்டத் துக்கு பாதீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு தொடர்பில் ஆராய்ந்து முடிவு களை எடுப்பதற்காகவே இன்றைய (நேற்றைய) ஒருங்கிணைப்புக்குழு கூட் டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் கலந்து ரையாடப்படவிருந்த இந்தக் கூட்டத்தில் சிவபூஜையில் கரடி புகுந்ததுபோன்ற சம்பவங்களும் இடம்பெற்றன. தொல்லை தாங்க முடியாமல் நாடாளுமன்ற உறுப் பினர் ஒருவர் வெளியேறிச் சென்றுள் ளார். மேலும் சில அதிகாரிகள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.
மோசமான செயற்பாடுகள் மூலம் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட் டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு வர் குழப்பியுள்ளார். இனிவரும் காலங் களில் தலைவருக்குரிய அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்துவேன்.
எவருடைய பேச்சுக்கும் கட்டுப்படாத நப ரொருவரால்தான் இப்படி நடந்தது.
தனக்குள்ள தனிப்பட்ட பிரச்சினை கார ணமாகசம்பந்தமில்லாதவிடயங்களைக் கூட அவர் குறிப்பிட்டுள்ளார். எத்தடை வரினும் யாழ்.மாவட்டத்துக்குரிய அபி விருத்தி திட்டங்கள் தொடரும். அவை உரிய வகையில் முன்னெடுக்கப்படும். ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருக் குள்ள அதிகாரம் இனி முழுமையாகப் பயன்படுத்தப்படும் - என்றார்.
வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், மாவட்டச் செயலர் மருத லிங்கம் பிரதீபன், நாடாளுமன்ற உறுப் பினர்களான கருணநாதன் இளங்கும ரன், ஜெ.ரஜீவன், ஸ்ரீபவானந்தராஜா, சிவஞானம் சிறீதரன், இராமநாதன் அர்ச்சுனா, வடமாகாணசபை அவைத்த லைவர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட வர்களுடன் திணைக்களங்களின் பதவி நிலை அதிகாரிகள், பிரதேச செயலாளர் கள், பிரதேச சபைகளின் செயலாளர் கள், பாதுகாப்பு தரப்பின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
(அ-ம-125-26-20)

## யுவதியொருவர்...

மீட்கப்பட்டுள்ளார். கிணற்றுக்குள் யுவதி யொருவர் சடலமாகக் காணப்படுகின் றார் என்பதை அவதானித்த ஊரவர்கள், விடயத்தை பொலிஸாருக்குத் தெரியப்ப டுத்தியுள்ளனர். இதையடுத்து பொலிஸா ரின் மேலதிக நடவடிக்கைகளைத் தொடர்ந்து யுவதியின் சடலம் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப் பட்டது. (அ-ம-18-110)

# கண்ணீர் அஞ்சலி



## சிவ ஸ்ரீ தாணு மஹாதேவக்குருக்கள்

(மஹாதேவ வாத்தியார்)

தோற்றம்:- 07 ✦ 12 ✦ 1937
மறைவு:- 25 ✦ 03 ✦ 2025

கீரிமலையை பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவ ஸ்ரீ தாணு மகாதேவ குருக்கள் 25.3.2025 ஆம் திகதி (நேற்று) இறைபதம் அடைந்தார்.
அன்னார் சிறு வயதில் ஆரம்பக் கல்வியை கற்று, வேதாகமங்களை சாஸ்திர முறைப் படி முறையாகப் பயின்றார், யாழ்ப்பாணம் இணுவையூரில் தர்ம சாஸ்தா குருகுலத்தை நிறுவி அதன் தலைமை ஆசிரியராகவும், ஆசிரியராகவும் செயற்பட்டு அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக அந்தண சிறார்களுக்கு வேத ஆகம சாஸ் திரங்களை இலவசமாகக் கற்பித்தார். அத்துடன் அவர்களுக்குத் தேவையான உணவு, உறையுள் போன்றவற்றை இலவசமாக வழங்கி இலங்கையில் உள்ள ஆலயங்கள் அனைத்தும் இயங்க பெரும் பணியாற்றினார். காயத்திரி பீடத்தை ஸ்தாபகம் செய்தார்.
வெளிநாடுகளில் அவருடைய மாணவர்கள் இன்றும் பல்வேறு சமயப் பணிகள் ஆற்றி வருகின்றார்கள். எல்லோருக்கும் சாஸ்திர அறிவை வழங்க வேண்டும் என்ற வேட்கை, தாணு மஹாதேவ சர்மா அவர்களை மகாதேவ வாத்தியாராக உருவாக்கி யது. அவருடைய வாழ்நாளில் பெரும் பகுதியை சைவத்திற்கும், சமயத்திற்கும் அர்ப்பணித்தவர் என்ற வகையில் அவருடைய இழப்பானது எம்மை பெரும் துயரில் ஆழ்த்தியுள்ளது. அவருடைய மறைவு எமக்கு மட்டுமன்றி உலகத்திற்கே பேரிழப்பா கும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திர காளி அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

**"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"**


ஸ்ரீ பத்திர காளி அம்பாள் தேவஸ்தானம், திருகோணமலை

சிவ ஸ்ரீ சோ. இரவிச்சந்திரகுருக்கள்
ஆலய ஆதீன கர்த்தா, பிரதம குரு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 04 . 1948



மறைவு 24 . 03 . 2025

## செல்வன் கர்ணன்

சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் கர்ணன் கடந்த 24.03.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வன் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், கிருஸ்ணன் - பூபதி, காலஞ்சென்றவர்களான சரவணன், அரியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலையை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

தகவல்:
கிருஸ்ணன் பூபதி
குடும்பம்
076 199 9060

(cs.57832) (N-1)

### பிரிட்டனின்...

பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மேலும் தெரிவித்ததாவது:-

மூன்று படைத்தளபதிகள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட இலங்கையர்கள் நால்வருக்கு பிரிட்டனால் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. சிவில் போரின்போது மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டன, சட்டத்துக்கு புறம்பான படுகொலைகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகள் இடம்பெற்றன ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காகவே இந்தத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

புலிகள்தான் உலகிலுள்ள மிகவும் அபாயமான பயங்கரவாத அமைப்பாகும். இப்படிப்பட்ட ஒரு அமைப்புடன் போரிட்டு வெற்றிபெறுவதற்கு பங்களிப்புச் செய்த படையினர் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். போர் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ளன. யாழ்ப்பாணத்து மக்களே போரை மறந்து, சிங்களத் தலைவர்கள் உள்ள அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் மீண்டும் இப்படியொரு சம்பவம் இடம்பெறுவது ஏன்?

இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார்? இதற்கு ஒத்துழைப்பு வழங்குபவர்கள் யார்? என்ற பிரச்சினையும் எமக்கு உள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாட்டை பிரிட்டனுக்கும், சர்வதேசத்துக்கும் ஜனாதிபதி தெரிவிக்கவேண்டும்.

மஹிந்த ராஜபக்ச ஆட்சிகாலத்தில் படையினருக்கு எதிராக போலியாகப் போர்க்குற்றச்சாட்டுகளை சுமத்தி அவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இடமளிக்கப்படவில்லை. தற்போது அதற்குரிய முயற்சி மீண்டும் இடம்பெறுகின்றதா? என்ற சந்தேகம் எழுகின்றது. போரை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டிய படையினருக்காக நாம் என்றும் முன்னிற்போம்' - என்றார். (அ-ம-44)

### வியாழேந்திரன்...

ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், ஏப்ரல் மாதம் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-இ)


## வீடு வாடகைக்கு

யாழ் நகரில் K.K.S வீதிக்கு
அருகாமையில்
வீடு வாடகைக்கு உண்டு.
மேலதிக விபரங்களுக்கு
074 273 9811

## விற்பனைக்கு

ஜெனரேட்டர் (இஞ்சின்)
விற்பனைக்கு உண்டு.
டீசல்
3.5 MW
தொடர்புகளுக்கு:
075 4757 056
077 9863 089

(CS 28131 A)


## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:-
Whatsapp:- 0044 740 537 3526

(CS/57780) J-1


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி கந்தசாமி

(தொழிலதிபர்)

(ஸ்தாபகர் ஸ்ரீஜங்கரன் வெதுப்பகம் & ஸ்ரோஸ் ஸ்ரீஜங்கரன் மணிமண்டபம் - டச்சு வீதி, சாவகச்சேரி. முன்னாள் கிளை முகாமையாளர் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், முன்னாள் பொருளாளர் கிராம்புவில் படையாண்டான் தோட்டம், முருகன் கோவில், சாவகச்சேரி வடக்கு)

**திதி : அபரபக்க துவாதசி (26.03.2025)**

ஆண்டுகள் இரண்டின்று ஆனதோ ஐயாவே அரனடிக்கு நீங்களும் சென்று
மாண்புடன் எம்மையிந்த மண்ணில் வளர்த்தீர் மங்காப் புகழுடன் மிளிர்ந்தீர்
மீண்டிங்கு வந்தெமக்கு மிகுமகிழ்வு தாரீரோ மிகையன்பு கொண்டுநாம் கேட்கிறோம்
ஈண்டுநாம் உள்ளவரை இதயத்தில் உம்மை ஏற்றியே வணங்குவோம் எந்தையே
ஸ்ரீஜங்கரன் நிறுவனத்தை ஆண்டுமே இருந்தீர் ஆன்மீகப் பணியதும் செய்தீர்
தங்களின் குடும்பத்தைத் தாங்கியே காத்தீர் தரணியில் மதிப்புமிகப் பெற்றீர்
எங்களைக் கதறவிட்டு எங்குற்றீர் ஐயாவே ஏங்கித் தவிக்கிறோம் நாமே
பங்கமின்றி நாங்களிப் பாரதனில் வாழப் பரிந்தருள் செய்திடவே வாரீர்

1 ஆம் கட்டை வீதி, மருதடி மேற்கு,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

(CS/44657) J-1

குடும்பத்தினர்


# NEW SCIENCE HALL
## KANNATHIDDY ROAD, JAFFNA

# 2027 A/L
## கணித உயிரியல் பிரிவுகள்

நேரடி வகுப்புக்கள் மற்றும் நிகழ்நிலை வகுப்புக்கள்

| தமிழ்மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS**<br>திரு. G. பிரபா<br>திரு. N. கபிலன்<br>திரு. R. ராகுலன் | **PHYSICS**<br>Mr. M. KUGANESWARAN |
| **CHEMISTRY**<br>திரு. G. Beno<br>திரு. V.K. நந்தா | **CHEMISTRY**<br>Mr. G. BENO |
| **BIOLOGY**<br>திரு. R. குகானந்தன்<br>திரு. K. இராகவன் | **BIOLOGY**<br>Mr.V.S. GUNASEELAN |
| **COM.MATHS**<br>திரு. P. செந்தில்நாதன்<br>திரு. V.S. சிவகரன் | **COM.MATHS**<br>திரு. P.SENTHIL NATHAN<br>திரு. V.S. SIVAKARAN |

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

**ஆரம்பம்: 30.03.2025 (Sunday) 9-15 am**

நிகழ்நிலை வகுப்புகளுக்கு சகல மாவட்டங்களில் இருந்தும் இணைந்து கொள்ளலாம்.

தொடர்பு: 076 566 3006, 076 569 3006, 077 791 7611

https:facebook.com / new science hall


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.